# நூலாசிரியர்



**சாந்திப்பிரியா**
( nrj_1945@yahoo.com )

1945 ஆம் ஆண்டில் பிறந்த என்னுடைய பெயர் ஜெயராமன். மத்திய அரசின் ஒரு பிரிவில் உயர் அதிகாரியாக பதவி புரிந்தப் பின் 2005 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற நான் சாந்திப்பிரியா மற்றும் ஜெயசுதா என்ற புனைப் பெயர்களில் தமிழில் ஆலயங்கள், மகான்கள், விரதங்கள் போன்றவற்றில் ஆன்மீகக் கட்டுரைகள் எழுதி வருகின்றேன். கடந்த இரண்டே ஆண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆன்மீகக் கட்டுரைகள் பல இதழ்களில் வெளியாகி உள்ளன. ஸ்ரீ சிவபால யோகி, ஸ்ரீமானிக் பிரபு. ஸ்ரீஅய்யா வைகுண்டர் (http://www.ayyavazhi.org/) போன்ற மகான்களை பற்றி வாழ்க்கை வரலாறு, தத்தாத்திரேயர் சரித்திரம், ஸ்ரீந்ருசிம்ம சரஸ்வதி ஸ்வாமிகள் சரித்திரம், ஸ்ரீ பாலகங்காதர ஸ்வாமிகளுடைய ஆசிரமத்திற்கு மனித நேயத்திற்கான மேம்பாட்டுச் சேவைகள் போன்ற பல புத்தகங்களை எழுதி உள்ளேன். அவற்றில் சில வெளியாகி உள்ளன, சில விரைவில் வெளியாக உள்ளன. ஸ்கந்த முருகன் பக்தி இணையதளத்தில் (www.murugan.org) நான் தமிழாக்கம் செய்துள்ள இருபத்தி ஐந்திற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாகி உள்ளன. ஐரோப்பாவைச் சேர்ந்த டேவிட் காட்மன் என்ற இரமணமகரிஷி பக்தருடைய இணைய தளத்திலும் ( http://david godman.org) இரமணமகரிஷியின் பல கட்டுரைகளை தமிழாக்கம் செய்ய அவைகளும் பிரசுரமாகி உள்ளன. நான் தமிழாக்கம் செய்துள்ள மகாவம்சம் என்கின்ற இலங்கை வரலாறு (350 க்கும் மேற்பட்ட பக்கம்) http://mahavamsa.org/mahavamsa/mahavamsam/ யில் வெளியாகி உள்ளது.